ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2312/73 - 2022 දෙසැම්බර් මස 31 වැනි සෙනසුරාදා - 2022.12.31
2312/73 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வைச் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்**

5 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வைச் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், இக்கட்டளையின் மூலம், மேற்குறித்த பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 2019, நவெம்பர் 14 அந் திகதிய 2149/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலினால் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான, 2006, ஒற்றோபர் 05 ஆந் திகதிய 1465/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட கட்டளையை, அதனகத்தேயுள்ள அட்டவணையின் விடய இலக்கம் 36 இற்குப் பின்னர் உடனடுத்து வருமாறு பின்வரும் புதிய விடயத்தினைச் சேர்ப்பதன் மூலம் திருத்தியமைக்கின்றேன்.

37. "2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவினால் கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் அதிகாரப் பகுதியின் எல்லைக்குள் உள்ள ஏதேனும் காணியைக் குத்தகைக்கு விடுவது தொடர்பான ஏதேனும் ஆவணம், அத்தகைய குத்தகை தொடர்பான குத்தகைக் கட்டுப்பணம் (பிரீமியம்) மற்றும்/அல்லது குத்தகை வாடகை/பரிசீலனையானது, அரசாங்கம் ஒரு தரப்பாக இருக்கும் உடன்படிக்கையொன்றிற்கிணங்க, 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டம் நடைமுறைக்கு வந்த திகதியிலிருந்து குத்தகைதாரரால் அரசாங்கத்திற்கோ அல்லது சொல்லப்பட்ட கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவிற்கோ பணமாக செலுத்தப்படுவதில்லை."

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
2022, திசெம்பர் 31.

EOG 01-0131

1A - PG 6165 — 456 (2023/01) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.